# தேசியம்

THESIYAM ජේසියම්

www.thesiyamnews.com



சிறந்ததில் மிகச்சிறந்தது

OFFSET | DIGITAL | SCREEN PRINTING | CTCP PLATE MAKING | WEDDING CARDS

MATHI COLOURS

NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.
TEL : 021 222 9285
E-mail : mathicolours@gmail.com

CUSTOMER CARE
+94 77 722 2259



குரல் - 62 | 21.05.2023 (ஞாயிற்றுக்கிழமை) | வைகாசி மாதம் | பக்கங்கள் 6 | ஊக்குவிப்பு : ரூ.30.00




பக்கம் 5

# தமிழர் பகுதியில் தொடரும் ஆக்கிரமிப்பு

## 298 ஏக்கர் காணியில் புதிய படைத்தளம்..!

**இப்பிரதேசத்தில் மக்களின் வாழ்க்கைக்கு பிரச்சினைகள் உள்ளதாலும், திருகோணமலையில் போதுமான முகாம்கள் உள்ளதாலும் இப்பகுதிகளுக்கு விமானப்படை முகாம் தேவையில்லை எனவும் திருகோணமலை சிவில் உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.**

## ஜூலைக் கலவரம் போன்று மீண்டும் ஒரு அனர்த்தம்...!

### பேரினவாதத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை: கே.வி.தவராசா



பக்கம் 5

தமிழர் உரிமைப் போராட்டத்தின் மீது தடைக்கற்கள் நடாதீர்கள் என ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்துள்ளார். ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பிலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "யுத்தம் முடிந்து 14 ஆண்டுகளாகின்றது. தமிழர் உரிமைப் போராட்டத்திற்கு இன்னும் தீர்வைப் பெற்றுக்கொள்ள இயலவில்லை. தமிழர் தரப்புத் தலைமைத்துவம் இன்னும் வலுப்பெற்று தமிழினத்துக்காக உயிர் நீத்த அத்தனை தியாகிகளினதும் கௌரவம் பேணும் தரத்தில் உரிமைக் குரலை உயர்த்தவில்லையாயினும் மக்களின் இடைவிடாத சாத்வீகப் போராட்டம் இன்னும் இடைவிடாது தொடர்ந்து கொண்டுதான்



பக்கம் 5

## புத்தர் ஒரு தமிழர்

### சூளுரைக்கும் பௌத்த பிக்கு..!

புத்தர் சிங்களம் அல்ல, அவர் ஒரு தமிழர் எனவும் தையிட்டி விகாரை தமிழர் நிலங்களை களவெடுத்து கட்டிய விகாரை எனவும் நயினாதீவு ரஜமஹா விகாரையின் விகாராதிபதி தெரி வித்துள்ளார்.

## முள்ளிவாய்க்காலில் பாலச்சந்திரன் போன்று உடையணிந்த சிறுவனுக்கு போலிஸார் அச்சுறுத்தல்!!!

இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்ட உள்நாட்டுப் போரில் 2009 மே 18 நடந்த அத்துணை சம்பவங்களும் என்றும் மாறாத வடுக்களாக தமிழர் மனதில் ஆழ பதிந்துள்ளது. ஒவ்வொரு வருடமும் மே 18 முள்ளிவாய்க்கால் நினைவு தினம் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் மக்கள் அனுஷ்டித்து வருகின்றனர். கடந்த(18.05.2023)ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடத்தில் சிறுவன் ஒருவர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவரின் மூன்றாவது மகன் பாலச்சந்திரன் போன்று உடையணிந்து வரும் போது பொலிஸார் அவரை காணொளி மற்றும் புகைப்படங்களை எடுத்து அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்ட காணொளிகள் தற்போது சமூக



பக்கம் 3

## முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த அனைவரும் புலிகள் அல்ல..!

### புலிகளும் இந்த நாட்டு மக்களே





பக்கம் 4

யுத்தத்தின் போது உயிர்நீத்தவர்கள் அனைவரும் இந்த நாட்டு மக்கள் என்றும் எனவே அவர்கள் முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களை நினைவுகூருவதற்கு உரிமை உள்

## வவுனியாவில் 1000 ஏக்கரில் கரும்பு செய்கை, சீனித் தொழிற்சாலை சீன பின்னணி திட்டம்?

### இந்தியா சந்தேகப்பார்வை!

வவுனியாவில் அமைக்க அனுமதி கோரப்பட்டுள்ள கரும்பு பண்ணையுடனான சீனித் தொழிற்சாலையின் பின்னணியில், இந்தியா சந்தேகமடைந்துள்ளதாக அறிய முடிகிறது. வவுனியா வடக்கு பகுதியில் சுமார் 1000 ஏக்கர் பரப்பளவில் கரும்பு செய்கையும், சீனித் தொழிற்சாலையும் அமைக்கும் திட்டம், கொழும்பு- மத்திய அரசின் மூலம் வேகமாக




பக்கம் 5

# மே-18 தமிழின அழிப்பு நாளிலும் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்
# அரசியல் தீர்வே அவசியம்.!



மே-18 தமிழின அழிப்பு நாளிலும் கிழக்கு மாகாணத்தில் நினைவேந்தல்களுக்கு புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல் காணப்பட்டதாகவும் எனவே எதிர்காலத்தில் நினைவுகூரல்களை நடாத்த வேண்டுமாயின் நிரந்தரமான அரசியல் தீர்வொன்று வேண்டும் என வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் வடக்கு கிழக்கிலுள்ள அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒரு குடையின் கீழ் நின்று தீர்வுத் திட்டங்களை ஒருமித்து, தேசியத்திற்கும் சர்வதேசத்திற்கும் முன்வைக்க வேண்டும். என வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா வலியுறுத்தியுள்ளார்.

வடகிழக்கில் அரசியல்வாதிகள் இருந்தாலும் மக்களின் அரசியல் உரிமை, அரசியல் தீர்வு விடயம் தொடர்பாக சமூகமயப்படுத்துவதற்கும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்வதற்குமான தார்மீகப் பொறுப்பு சிவில் சமூகங்களாகிய எங்களுக்கு உண்டு.

வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் ஒருமித்த ரீதியில் தங்களுடைய அரியல் தீர்வு தொடர்பான விடயங்களை தேசத்திற்கோ சர்வதேசத்திற்கோ பரிந்துரை செய்யாமல் ஒவ்வொருவரும் தமக்கேற்றவகையில் தீர்வுப் பொதிகளை முன்வைத்த வண்ணமுள்ளனர்.

அந்த வகையில் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஒருமித்து அரசியல் தீர்வுகளை முன்வைப்பதானது காலத்தின் தேவையாகும்.

இலங்கைக்கு வரும் ஒவ்வொரு இராஜதந்திரிகளும் வடக்கு கிழக்கிலும் தெற்கிலும் தமது பயணங்களை நிறைவு செய்த பின்னர் பத்திரிகையாளர்கள் சந்திப்பில், தெற்கு பற்றி நிலையாக நிலைப்பாட்டை கூறினாலும் வடக்கு கிழக்கில் ஒவ்வொரு தரப்பும் பல்வேறு தரப்பாக செயற்படுவதால் இராஜதந்திரிகள் நிலையான விடயங்களை முன்வைப்பதில்லை.

கடந்த சில நாட்களுக்கு முன் இடம்பெற்ற மே 18 தமிழின அழிப்பு நாளிலும் கிழக்கு மாகாணத்தில் நினைவேந்தல்களுக்கு புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல் காணப்பட்டது. இது போன்ற நினைவுகூரல்களை நடாத்த வேண்டுமாயின் நிரந்தரமான அரசியல் தீர்வொன்று வேண்டும்.

# இந்த வருடத்தில் - அதி நவீன நகரமாக யாழ்ப்பாண நகரம் அபிவிருத்தி
# ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு !



கண்டி மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களுக்கான அபிவிருத்தியை தொடர்ந்து யாழ் மாவட்டமும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் அனைத்து மகாணங்களிலும் அபிவிருத்தி திட்டங்களை விரையில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்துள்ளத்தாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

குறிப்பாக கண்டி நகரத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி அதி நவீன நகரமாக மாற்றியமைக்க தேவையான வேலைத்திட்டங்களை ஆரம்பிக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளை நேற்று சந்தித்து ஆசிபெற்றுக் கொண்டதன் பின்னர் ரணில் விக்ரமசிங்க இவ்வாறு தெரிவித்திருந்தார். கண்டியிலுள்ள பழைய சிறைச்சாலை மற்றும் தபால் நிலைய கட்டிடத் தொகுதிகளின் சிறப்பம்சங்களை பாதுகாக்கும் வகையில், அப்பகுதிகளை சுற்றுலாப் பிரயாணிகளின் அவதானத்தை ஈர்க்கத்தக்க இடங்களாக மாற்றியமைப்பதற்கான திட்டமிடல்களை முன்னெடுக்கவிருப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் வெற்றியடைந்ததன் பின்னர் எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்குள் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர முடியும் என நான் நம்புகிறேன்.

அதன் பிறகு, நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்த அதிக முதலீடுகள் தேவைப்படுகின்றன. மேலும், அதிகளவான சுற்றுலாப் பயணிகளை இந்நாட்டிற்கு அழைத்து வர வேண்டும். திருகோணமலை புதிய நகரத் திட்டம் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கண்டி பெருநகர அபிவிருத்தி திட்டத்தை இவ்வருடத்தில் ஆரம்பிப்பதற்கு நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். அதன் பின்னர் யாழ்ப்பாண பெருநகரமும் அபிவிருத்தி செய்யப்படும்.

# பாடசாலைகளில் போதைப்பொருள்
# கல்வியமைச்சு எடுத்துள்ள நடவடிக்கை.!



பாடசாலை மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு ஆளாவதைத் தடுப்பதற்கும், மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் விழிப்புணர்வை மேலும் விரிவுபடுத்துவதற்கும் ஏற்கனவே பின்பற்றப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளை மேலும் திறம்பட முன்னெடுப்பதற்கும் கல்வி அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

கல்வி அமைச்சர் பிரேமஜயந்த பணிப்புரைக்கமைய இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது.

பாடசாலை முறையின் தற்போதைய நிலை தொடர்பில் விரிவான கலந்துரையாடல் நேற்று கல்வியமைச்சில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் இடம்பெற்றிருந்தது. அத்துடன் பாடசாலை பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடை விநியோகம் தொடர்பிலான விடயங்கள் கலந்துரையாடப்பட்டதுடன் டெங்கு தொற்றுநோயை கட்டுப்படுத்தும் முறைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், பாடசாலைகளில் மதிய உணவுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் விதம் குறித்து இங்கு கேட்டறிந்ததுடன், சத்துணவுத் திட்டம் எதிர்காலத்திலும் தொடரும் எனத் தெரிவிக்கப்பட்டது.

நாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் தரம் ஒன்றிலிருந்து பாடசாலை மாணவர்களிடம் ஆங்கிலத்தில் பேசுவதற்கான நடைமுறை ஆரம்பமானது.

2023 ஆம் ஆண்டின் முதலாம் தவணை தொடக்கத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்படுவதுடன், தேவையான ஆய்வுகளை மேற்கொண்டு அதனை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மூன்று பேருக்குப் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு!






யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாகவும், ஒருவர் இணைப் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

பேராசிரியர் ஒருவர் துறைக்குரிய இருக்கைப் பேராசிரியராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தைச் சேர்ந்த ஒருவரும், விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவருமாக இரண்டு சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகவும், விவசாய பீடத்தைச் சேர்ந்த ஒருவரை இணைப் பேராசிரியராகவும் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியதுடன், முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஒருவரைத் துறைக்கான இருக்கைப் பேராசிரியராக நியமிப்பதற்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று (20), சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் நேற்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அவற்றின் படி, முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தின் மனித வள முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர், கலாநிதி (திருமதி) எஸ். எம். சி. மகேந்திரன் அலோசியஸ் மனித வள முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும், விஞ்ஞான பீடத்தின் இரசாயனவியல் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி பூ. ஐங்கரன் இரசாயனவியலில் பேராசிரியராகவும், விவசாய பீடத்தின் விவசாயப் பொருளியல் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கே. சூரியகுமார் விவசாயப் பொருளியலில் இணைப் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

இதேநேரம், முகாமைத்துவ கற்கைகள், வணிக பீடத்தில் மனித வள முகாமைத்துவத் துறையில் பேராசிரியரும் மனித வள முகாமைத்துவத் துறைத் தலைவருமான பேராசிரியர் என் கெங்காதரன் மனித வள முகாமைத்துவத் துறைப் பேராசிரியராகப் (துறைக்கான இருக்கைப் பேராசிரியர்) பதவி உயர்த்தப்படுவதற்கான தெரிவுக் குழுவின் பரிந்துரையைப் பரிசீலனை செய்த பேரவை அதற்கான அங்கீகாரத்தையும் வழங்கியுள்ளது.

# 15 நாட்களில் சென்னை - இலங்கை
# கப்பல் சேவை ஆரம்பம்!

சென்னை துறைமுகத்தில் இருந்து இலங்கைக்கு கப்பல் இயக்குவது தொடர்பாக கார்டிலியா என்ற நிறுவனத்திற்கு அனுமதி கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த நிறுவனத்தின் எம்பிரஸ் என்ற பயணியர் கப்பல், சென்னையில் இருந்து ஜூன் 5ஆம் திகதி முதல், இலங்கைக்கான பயண சேவையை ஆரம்பிக்கவுள்ளது. இந்தக் கப்பலானது ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், கொழும்பு உள்ளிட்ட நகரங்களுக்கு செல்லவிருக்கிறது. மூன்று நாள் பக்கேஜில் பயணிக்க, தம்பதிக்கு 85 ஆயிரம் ரூபாய் வரை கட்டணம் வசூலிக்கப்படவுள்ளதாக கூறப்படுகிறது. சென்னையில் இருந்து 24 மணி நேரத்திற்குள், இந்தப் கப்பல் இலங்கையின் பல் வேறு துறைமுகங்களுக்கு சென்று வரவுள்ளது. சென்னை துறைமுகத்தின் 7ஆவது நுழைவாயில் வழியாக, பயணியர் அனுமதிக்கப்பட உள்ளனர்.

இந்த கப்பலில், ஒரே நேரத்தில் 1, 600 பேர் வரை பயணிக்க முடியும்.

# வடகிழக்கு மாகாணத்திற்குள் மீளப்பெற முடியாத
## சமஸ்டி அரசியல் தீர்வு முறையை வலியுறுத்தி மக்கள் கலந்துரையாடல்!



வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாடு செய்த வடக்கு கிழக்கு மாகாணத் திற்குள் மீளப்பெற முடியாத சமஸ்டி அரசி யல் தீர்வு முறையை மக்கள் மயப்படுத்தும் நோக்கில் கலந்துரையாடலானது நேற்று (20) யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்ற பொது மண்டபத்தில் இடம்பெற்றது.

2022 ம் ஆண்டு கார்த்திகை 8 ம் திகதி வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு வால் முன்வைக்கப்பட்ட ஐக்கிய இலங் கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக் கில் மீளப்பெற முடியாத சமஸ்டி முறை யிலான அதிகாரப் பகிர்வை தமிழ் மக்க ளின் அரசியல் தீர்வுப் பிரகடனமாக முன் வைத்திருந்தோம்.

அந்த வகையில் குறித்த தீர்வுத் திட்டம் தொடர்பாக கடந்த காலங்களில் வெளிநாட் டுத் தூதரகங்கள் உட்பட பல்வேறு அரசி யல்வாதிகளைச் சந்தித்து இது தொடர்பாக வலியுறுத்தப்பட்டிருந்தது.

இதனை மக்கள் மயப்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சிவில் செயற் பாட்டாளர்கள் , பல்கலைக்கழக மாணவர் கள் மற்றும் பொதுமக்களுடன் கலந்துரை யாடல்களை மேற்கொள்ளவுள்ளோம்.

அதனடிப்படையில் கடந்த கிழமை திரு கோணமலையில் மக்களுடன் கலந்துரை யாடல்களை ஆரம்பித்ததுடன் இரண்டாம் கட்டமாக நேற்று யாழ்ப்பாணத்தில் கலந்து ரையாடல் இடம்பெற்றது.

இதேவேளை எதிர்வரும் தினங்களில் மட் டக்களப்பு, அம்பாறை உட்பட ஏனைய இட ங்களில் தொடர்ச்சியாக இடம்பெறவுள் ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

# கௌதாரிமுனை காற்றாலை மின்னுற்பத்தி நிலையம் குறித்து மக்கள் கருத்துக்களை கேட்டறியும் கலந்துரையாடல் !!



கௌதாரிமுனை பகுதியில் அமைக்கப்பட வுள்ள காற்றாலை மின்னுற்பத்தி நிலை யம் தொடர்பில் மக்கள் கருத்துக்களை கேட்டறியும் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

குறித்த பகுதிக்கு நேற்று விஜயம் மேற் கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், அப்பகுதி மக்களு டன் கலந்துரையாடினார்.

இதன்போது குறித்த காற்றாலை அமைப் பது தொடர்பில் மக்களின் எதிர்பார்ப்புக்கள், மற்றும் நன்மை தீமைகள் தொடர்பில் அவர் கேட்டறிந்து கொண்டார். கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்குழு கூட்டத்தில் குறி த்த காற்றாலை மின்னுற்பத்தி நிலையத்தி ற்கு அனுமதி கோரப்பட் டது.

குறித்த அனுமதிக்கு முன்னர் அவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து நன்மை தீமைகள் பற்றி அறநித் பின்னரே அனுமதி வழங்க முடியும் என நாடாளுமன்ற உறுப்பினர் கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் குறித்த பகுதிக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பி னர் பிரதேச மக்களிடம் கலந்துரையாடி விடயங்களை பெற்றுக்கொண்டதாக ஊடக ங்களிற்கு தெரிவித்தார்.

இதேவேளை, குறித்த காற்றாலை அமைப் பதனால் தமது மீன்பிடி தொழில் பாதிக்கப் படும் எனவும், அதனை தாம் எதிர்ப்பதாக வும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

# திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக கடமையேற்கின்றார் சார்ள்ஸ் !!



புதிதாக நியமனம் பெற்றுள்ள வடக்கு மாகாண ஆளுநர் பி. எஸ்.எம்.சாள்ஸ் எதிர்வரும் திங் கட்கிழமை உத்தியோகபூர்வ மாக கடமைகளைப் பொறுப் பேற்கவுள்ளார். குறித்த தினம் காலை 9.30 மணிக்கு யாழ்ப்பா ணத்தில் உள்ள வடமாகாண ஆளுநர் செயலகத்தில் குறித்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

முன்னாள் வடமாகாண ஆளு நராக கடமையாற்றிய ஜீவன் தியாகராஜா 15ம் திகதி ஜனா திபதி ரணில் விக்ரமசிங்கவி னால் பதவி நீக்கம் செய்யப்பட் டார். இதனை அடுத்து 17 ம் திகதி பி.எஸ்.எம்.சாள்ஸ் ஜனா திபதி ரணில் விக்ரமசிங்கவி னால் வடக்கு மாகாணத்தின் புதிய ஆளுநராக நியமிக்கப்பட் டார்.

# இலங்கையின் கடன் பிரச்சினைகளைத்
## தீர்ப்பதற்கான அமைப்பிற்கு ஜீ7 நாடுகள் வரவேற்பு




இலங்கையின் கடன் பிரச்சி னைகளைத் தீர்ப்பதற்காக, இந்தியா, பிரான்ஸ் மற்றும் ஜப் பான் ஆகிய நாடுகளின் தலை மையின் கீழான நடவடிக்கை க்கு ஜீ-7 நாடுகளின் கூட்டணி வரவேற்பு தெரிவித்துள்ளது.

ஹிரொஸிமா நகரில் வெள்ளி க்கிழமை ஆரம்பமான ஜீ-7 நாடுகளின் தலைவர்களது 49 ஆவது மாநாடு நாளை வரை இடம்பெறவுள்ள நிலையில் அறிக்கை ஒன்றினை வெளி யிட்டு இதனை உறுதிப்படுத்தி யுள்ளது.

மேலும் நடுத்தர வருமான நாடுகளுக்கு தீர்வு காண்பதற் கான எதிர்கால பலதரப்பு முயற் சிகளுக்கு ஒரு வெற்றிகரமான முன்மாதிரியாக விரைவான தேர்வு அவசியம் என்றும் வலி யுறுத்தியுள்ளது.

## முள்ளிவாய்க்காலில் பாலச்ச...

வலைத்தளங்களில் பகிரப்பட்டுள்ளது. 2009 மே 18 ஆம் திகதி விடுதலைப் புலி கள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரன் மிகக் கொடூ ரமான முறையில் இலங்கை இராணு வத்தினரால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல ப்பட்டார். பாலச்சந்திரனின் தருணங்களை மீள நினைவுப்படுத்தும் வகையில் பாலச்ச ந்திரன் போன்று உடையணிந்து முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் இடத்திற்கு வரும் போதே இவ்வாறு சிறுவன் மற்றும் சிறுவனுடன் உடன் இருந்த அனைவரை யும் பொலிஸார் காணொளி மற்றும் புகைப்படம் எடுத்து அச்சு றுத்தியுள்ளனர்.

பாலச்சந்திரன் பிரபாகரன் போன்று உடை யணிந்து, அவர் இறுதியாக அமர்ந்தி ருந்ததை போன்று சிறுவன் ஒரு இடத்தில் அமர்ந்த காட்சி அப்படியே பாலச்சந்திரனை பிரதிபலிப்பதாக இருந்தமையால் அங்கி ருந்த மக்கள் அனைவரும் அந்த சிறு வனை பார்த்து, மெய் சிலிர்த்து போனது டன் பலர் கண்ணீர் சிந்தினர் என்பது யாரா லும் மறக்கமுடியாத கடினமான நிமிடங்க ளாகும்.

# மலையக மக்களின் உரிமைகளை வலியுறுத்தி
## யாழில் கவனயீர்ப்பு போராட்டம்!!



மலையக மக்களின் உரிமைகளை வலியுறுத்தி யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்று அமைதியான முறையில் கவன ஈர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் பூர்த்தி செய்த நிலையில் தேசிய கிறி ஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் இந்த கவன ஈர் ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு கோரிக்கைகளை ஏந்திய பதாகைகளை தாங்கியவாறு போராட்டக்காரர் கள் அமைதியான முறையில் போராட்டத்தை மேற்கொண்டனர்.

“மலையக மக்கள் சுதந்திரமாக வாழ காணி வழங்கு”, “மலையக மக்களை சிதைக்க வேண் டாம்”, “பதவிகளுக்கு மலையக மக்களை விற் காதே” போன்ற பதாகைகளை ஏந்தியவாறு இந்த போராட்டம் நடைபெற்றது.

# நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்த மகோற்சவம்..!
## காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு!



வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் ஒக ஸ்ட் மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையில் நல் லூர் கந்தசாமி ஆலய நிர்வாகத்தினரால் யாழ் மாநகர சபை நிர்வாகத்திடம் காளாஞ்சி கைய ளிக்கும் வைபவம் நேற்று காலை 10 மணியள வில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள் ளது.

வருடாவருடம் நல்லூர் கந்தசுவாமி ஆலய ஆலய வருடாந்த மகோற்சவ காளாஞ்சி யாழ் மாநகர சபை நிர்வாகத்திடம் சம்பிரதாயபூர்வ மாக கையளிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிட த்தக்கது.

தேசியம் THESIYAM www.thesiyamnews.com

# தேசிய மட்ட தடகள போட்டிகளில் பதக்கங்களை சுவீகரித்த யாழ்.மாணவர்கள்

கனிஸ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட தட கள போட்டிகள், யாழ்ப்பாணத்தின் தியகம ராஜபக்ச மைதானத்தில் முன்னெடுக்கப்பட் டிருந்தன.

பருத்தித்துறை
இந் போட்டியில்,பருத்தித்துறை - ஹாட்லிக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த மாணவர்கள் வெள்ளிப் பதக்கங்களைச் சுவீகரித்துள்ளனர்.



இதில் ஹாட்லிக் கல்லூரி மாணவனான தருண் 16 வயதிற்குட்பட்ட ஆண்களுக் கான சம்மட்டி எறிதல் போட்டியில் 31.60 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

அத்துடன் ஆர்.சஞ்சய் 20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான சம்மட்டி எறிதல் போட்டி யில் 31.91 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

பொலிகண்டி
கனிஸ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட தடகள தொடரில் பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த சிறீதரன் ஜங்கரன் வெண்கல பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.



இதில் 16 வயதுப் பிரிவினருக்கான சம் மட்டி எறிதல் போட்டியில் சிறீதரன் ஜங் கரன் 27.45 மீற்றர் தூரம் எறிந்து வெண் கல பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

நெல்லியடி
கனிஸ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட தடகள போட்டியில் சம்மட்டி எறிதலில் நெல் லியடி மத்திய கல்லூரியை பிரதிநிதித்து வம் செய்த விஷ்ணுப்பிரியன் வெண்கல பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்.



இதில் 20 வயதிற்குட்பட்ட ஆண்களுக் கான சம்மட்டி எறிதல் போட்டியில் விஷ்ணு ப்பிரியன் 29.13 மீற்றர் தூரம் எறிந்து வெண்கல பதக்கத்தைக் கைப்பற்றியுள் ளார்.

# துர்நாற்றம் வீசும் பிரதான பேருந்து தரிப்பிடம் முகம் சுழிக்கும் மக்கள்!




அம்பாறை மாவட்டம் கல்முனையில் அமை க்கப்பட்டுள்ள பஸ் தரிப்பு நிலையம் பொதுமக் களின் பாவனைக்கு உகந்த இடமற்றதாக மாறி வருகின்றது.எனவே கல்முனை பேரு ந்து தரிப்பு நிலையத்தில் நிலவுகின்ற குறை பாடுகளை நிவர்த்தி செய்து அவற்றினை புனரமைப்பதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் மேற்கொள்ளுமாறு பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இங்குள்ள பஸ் தரிப்பு நிலைய கூரைகள் இடி ந்து விழும் நிலையிலும் புறாக்கள் பாம்புகள் விச ஜந்துக்கள் வாழ்கின்ற வாழ்விடமாகவும் துர்நாற்றம் வீசுகின்ற இடமாகவும் காணப் படுவதாகவும் விசனம் தெரிவிக்கப்படுகின் றது.

இது தவிர பஸ் தரிப்பிடத்துடன் இணைந் துள்ள மலசல கூடம் உடைந்த நிலையிலும் உரிய பராமரிப்பு இன்றியும் காணப்படுகின் றது. மேலும் குறித்த பேரூந்து தரிப்பிடத்தில் அமைந்துள்ள சிறு உணவகத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் உரிய முறையில் அக ற்றப்படாமையினால் அவ்விடத்தில் துர்நாற் றம் வீசுகின்றது.

கடந்த காலங்களில் கல்முனை பஸ் நிலை யம் சகல வசதிகளுடன் நவீன மயப்படுத்தப் படவுள்ளது என அரசியல்வாதிகள் பல்வேறு அறிக்கைகளை தெரிவித்திருந்தும் கூட இவ் வாறு மக்களின் பாவனைக்கு உகந்த இடம ற்றதாக மாறி வருகின்றமை உரிய பராமரிப் பின்மையை காட்டுகின்றது.

அத்துடன் அம்பாறை மாவட்டத்தில் முக்கிய வர்த்தக கேந்திர நிலையமாக கருதப்படு கின்ற கல்முனை பேருந்து தரிப்பு நிலையம் இவ்வாறு குறைகளுடன் காணப்படுவது தொடர்பில் பொதுமக்கள் முகப்புத்தகத்திலும் சமூக ஊடகங்களிலும் தத்தமது வருத்தத் தினை தெரிவித்திருந்து வருகின்றமை குறிப் பிடத்தக்கது.

# யாழ். புங்குடுதீவு வைத்தியசாலைகளில் விசேட கிளினிக் சிகிச்சை!



யாழ். புங்குடுதீவு வைத்தியசாலைகளில் விசேட கிளினிக் சிகிச்சை நிகழ்வில் வட மாகாண பதில் சுகாதார சேவைகள் பணிப் பாளர், யாழ் போதனா வைத்தியசாலை யின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி கலந்து கொண்டு விஷேட சிகிச்சையின் ஆரம் பித்துவைத்தார்.

யாழ். போதனா வைத்தியசாலை உத்தி யோகத்தர்களின் பங்குபற்றுதலில் விசேட கிளினிக் இடம்பெற்றது.

யாழ். போதனா வைத்தியசாலை வைத் திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதி யர்கள், மருத்துவர்கள் மற்றும் புங்குடுதீவு வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

# இலங்கையை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்துதல்! பொதுசன வாக்கெடுப்பு: அமெரிக்க செனட்டில் தாக்கல் செய்யப்பட்ட பிரேரணை







இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தில் முற்படுத்த வேண்டும், இலங்கை யில் உள்ள அனைத்து மக்களின் ஜனநாயக உரிமைகளையும் உறுதிப்படுத்த சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பவை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை உள்ள டக்கிய பிரேரணையை அமெரிக்க செனட் உறுப்பினர்கள் 5 பேர், இந்த அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர்.

வரலாற்று ரீதியாக அடக்கப்பட்டுள்ள இலங் கையின் வடக்கு கிழக்கு பிராந்தியத்தின் அர சியல் உரிமைகளையும் பிரதிநிதித்துவத்தை யும் நியாயப்படுத்துமாறும், இனப்பிரச்சினை க்கு வித்திடக் காரணமான பிரச்சினைகளு க்கு தீர்வு காண்பதன் பொருட்டும், நிரந்தர மான அசியல் தீர்வுக்காக பணியாற்றுமாறும் சர்வதேச சமூகத்தை வலியுறுத்துகிறது.

இலங்கையில் உள்ள சகல இன மக்களின் ஜனநாயக சமத்துவத்தை உறுதி செய்ய பொதுசன வாக்கெடுப்பு உள்ளிட்ட, உலகள வில் ஏற்றுக்காள்ளப்பட்ட ஜனநாயக கோட் பாடுகளை இலங்கையில் நடத்த ஊக்குவிக்க வேண்டுமென்றும் பிரேரணை வலியுறுத்தி யுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் கறுவா பயிற்சி பட்டறை



யாழ்ப்பாணம், சங்கரத்தை பங்குரு சன சமூக நிலையத்தில் கறுவா உற்பத்தி தொடர்பான பயிற்சி பட்டறை நேற்று (20) முற்பகல் நடைபெற்றது. இந்த பயிற்சி பட் டறை வடக்கு மாகாண ரீதியில் இடம் பெற்றது. இந் நிகழ்வில் இலங்கை கறுவா ஆராய்ச்சி நிலைய பணிப்பாளர் கலாநிதி ஜீ.ஜீ. ஜயசிங்க பிரதம அதிதியாக கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத் தார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திரு மதி அஞ்சனாதேவி, பங்குரு சனசமூக நிலையத்தினர், பொதுமக்கள், பயிற்சியா ளர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## முள்ளிவாய்க்காலில் உயிர்நீத்த...

ளதாக உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பின் தலைவர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.
வடக்கு கிழக்கில் வாழ்கின்ற அனைவரும் புலிகள் அல்ல எனவும் அதேபோன்று முள் ளிவாய்க்காலில் உயிர்நீர்த்த அனைவரும் புலிகள் அல்ல என்றும் யுத்தத்தின் போது உயிர்நீத்தவர்கள் அனைவரும் இந்த நாட்டு மக்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார். அரசாங்கத்தின் ஆதரவுடன் முன் னெடுக் கப்படுகின்ற அரசியல் சூழ்ச்சிகளுக் குள் மக்கள் சிக்காமல் நாட்டி லுள்ள அனை த்து மக்களும் ஒற்றுமையாக அனைத்து மக்களின் பிரச்சனைகளையும் தீர்ப்பதற்கு அனை வரும் ஒன்றிணைய வேண்டு மென உரிமைகளுக்கான பெண்கள் அமைப்பின் தலைவர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கம் மக்க ளின் பிரச்சனைகளை தீர்க்காமல் மேலும் இனவாதம், மதவாதம் போன்ற விடயங் களை முன் நிலைப்படுத்துவதாக அவர் குற் றம் சுமத்தியுள்ளார். குறிப்பாக இராணுவம் மற்றும் பொலிசார் ஆகியோரை ஒன்று திர ட்டி இனவாத பயணத்தை ஆரம்பித்துள்ள தாகவும் அவர் இதன் போது தெரிவித்தார்.

## தமிழர் பகுதியில் தொடரும்...

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள 298 ஏக்கர் காணி மூடப்பட்டு விமானப்படைத் தளம் அமைப்பதற்கு வழங்கத் தயாராக இருப்பதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் ஏறக்குறைய 75 வருடங்களாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

இதில் **Deutsche Welle** ஒலிபரப்பு நிலையம் நிறுவப்பட்டுள்ளது, இது உலகின் மிகப்பெரிய பிராந்தியத்தை உள்ளடக்கியது, குறுகிய அலை மற்றும் நடுத்தர அலைகளை ஒளிபரப்புகிறது. தற்போது, உலகில் இவ்வகையான ஒரே ஒளிபரப்பு நிலையம் ஓமானில் உள்ளது, அது முழுநேரமும் இயங்கவில்லை.

அதன்படி, இலங்கையில் அதன் இருப்பிடம் காரணமாக, உலகின் பெரும் பகுதி இந்த ஒளிபரப்பு நிலையத்திலிருந்து பாதுகாக்கப்படுகிறது.

குறைந்த செலவில் நீண்ட தூரம் செல்லும் இந்த அலைவரிசைகளை தற்போது உலகின் பல்வேறு நாடுகள் மதம் மற்றும் பிற பிரச்சார நடவடிக்கைகளில் பயன்படுத்துவதாகவும், தற்போதைய வானொலியின் கீழ் சுமார் 75,000 அமெரிக்க டாலர்கள் பெறுவதாகவும் கூறுகிறார்கள்.

இந்த பகுதி வலுவான அலைகள் இருக்கும் பகுதி என்றும் பெயரிடப்பட்டது. நிலைமை இப்படி இருக்கும்போது கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் கொள்கை முடிவின்படி, 2021 ஆம் ஆண்டில் வருமானம் ஈட்டுவதற்காக பயன்படுத்தப்படாத வளங்களை அதிக உற்பத்தி வழியில் பயன்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

அதன்படி, அமைச்சின் ஒப்புதலுடன், வானொலி கூட்டுத்தாபனம் முறையான நடைமுறைகளைப் பின்பற்றி கனேடிய நிறுவனத்துடன் இணைந்து சூரிய சக்தித் திட்டத்தை ஆரம்பிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இதன்படி, குறித்த காணியை இலவச மானியப் பத்திரம் மூலம் வானொலிக் கூட்டுத்தாபனத்திற்கு மாற்றி உரிய திட்டத்தில் வருமானம் ஈட்டவும், அரசாங்கம் வழங்கும் பணத்தை நிறுத்தவும் இரண்டாவது அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

இதற்கிடையில், பிரதமரின் கண்காணிப்பு காலத்தில் தற்போதைய ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட கடைசி அமைச்சரவைப் பத்திரத்தின் (**MF/PE/CM/2022/125**) பின்னர், வானொலி கூட்டுத்தாபனம் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அதன்படி குறித்த கனேடிய நிறுவனத்துடனும் நிறுவனத்துடனும் வானொலி கூட்டுத்தாபனம் ஆரம்ப ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டது. அது தனது செயற்பாடுகளைத் தொடர்ந்தது.

இதன்படி, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மேற்படி விதிவிலக்கு அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்ததுடன், அனைத்துப் பரிந்துரைகளையும் பெற்ற பின்னர், இறுதி எழுத்துப்பூர்வ அனுமதியைப் பெறுவதற்காக காணி அமைச்சு அதற்கான கோப்பை 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 11 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்திடம் கையளித்தது.

இதனைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதியின் செயலாளர், சுற்றுப்புறங்களைச் சரிபார்க்காமலோ அல்லது கோரப்பட்ட அனுமதியிலோ ஒலிபரப்பு நிலையத்தை மூடிவிட்டு காணியை விமானப்படையிடம் ஒப்படைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வொன்றை மேற்கொள்ள விமானப்படையினரையே நியமித்துள்ளார்.

அதன்படி விமானப்படையின் குழு ஒன்று 5/3/2023 அன்று திருகோணமலை குச்சவெளிக்கு சென்று இந்த அறிக்கையை நடைமுறைப்படுத்த ஆரம்பித்து, இந்த அளவு வளங்கள் மற்றும் வேறு திட்டத்திற்கு சட்டபூர்வமாக வழங்கப்பட்ட நிலம் பற்றிய தகவல்கள் தெரியாமல், மூடுவதற்கு மட்டுமே உள்ளது.

இதன் மூலம் தகவல்களை சேகரித்து இறுதி அறிக்கைகளை நடைமுறைப்படுத்தும் பணியில் ஈடுபட்டு வானொலி கூட்டுத்தாபனத்திற்கு 5/17/2023 அமைச்சரவை பத்திரங்கள் மற்றும் உடன்படிக்கைகளை அமைப்பதற்காக வந்த பின்னர் அவர்கள் சங்கடத்திற்கு உள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் மக்களின் வாழ்க்கைக்கு பிரச்சினைகள் உள்ளதாலும், திருகோணமலையில் போதுமான முகாம்கள் உள்ளதாலும் இப்பகுதிகளுக்கு விமானப்படை முகாம் தேவையில்லை எனவும் திருகோணமலை சிவில் உரிமைகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதி மற்றும் சம்பந்தப்பட்ட பிரதேசத்தின் பொது பிரதிநிதிகளுக்கு அறிவிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஜீலைக் கலவரம் போன்று மீண்...

இருக்கின்றது. அதுமட்டுமே இன்றளவும் நமக்கிருக்கிருக்கும் நம்பிக்கை. அந்த நம்பிக்கையின் சுடரை அனைத்துவிடும் செயற்பாடுகளில் இப்போது சிலர் இறங்கியிருக்கின்றார்கள் என்பதுதான் வேதனையானது.

யுத்தம் முடிந்த கையோடு முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை முன்னெடுப்பதில் பல எதிர்ப்புகள் இருந்தன.

காலம் செல்லச் செல்ல தமிழர் போராட்டத்தில் இருந்த நியாயத்தை பெரும்பான்மை மக்கள் புரிந்துகொள்ளும் சூழலை காலம் மெல்ல மெல்ல ஏற்படுத்தியிருந்தது.

மக்களின் வேதனையும் உயிரிழப்பின் துன்பமும் மாறாத வடுவானதால் அதை நினைவுகூர்தல் பிழையல்ல என்ற நிலைப்பாட்டுக்கு பெரும்பான்மை மக்களில் நியாயமாகச் சிந்திக்கும் மக்கள் வரத்தொடங்கியிருக்கும் காலத்தில் தமிழர் கோரிக்கை நியாயமானது என்றும் ஏதேனும் தீர்வு அவர்களின் நியாயமான குரலுக்கு அளிக்கப்படுவதே தர்மமும் அறமும் என்று காலம் கனியத் தொடங்கியிருக்கும் பொழுதில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளின் பெயரால் சிலர் முதிர்ச்சியற்ற சுயநல அரசியலைச் செய்ய முனையும் போதுதான் தமிழர் போராட்டம் கொச்சைப்படுத்தப்படும் நிலைதோற்றம் பெறுவதோடு, மீளவும் இனங்களுக்கு இடையேயான புரிதலை இனவாதமாக மாற்ற சந்தர்ப்பம் பார்த்துக்கொண்டிருக்கும் சிலருக்கு வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பொரளையில் இருந்துதான் அதுவும் கனத்தைமயானத்தில் இருந்துதான் 1983 ஜீலைக் கலவரம் ஏற்படத் தூபமிடப்பட்டது.

40 ஆண்டுகளை நெருங்குகின்ற வேளையில் மீளவும் அதே இடத்தில் இருந்து மீளவும் ஒரு அனர்த்தத்தை ஏற்படுத்த வழியேற்படுத்திக் கொடுக்க சிலர் முனைவது பேரினவாதத்தின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை தூண்டும் செயல்பாடுமாகும்.

வடக்குகிழக்கில் நினைவேந்தல் ஒவ்வொரு முறையும் பல்வேறு தடைகளையும் தாண்டி முன்னெடுக்கப்பட்டே வந்தது. அதனைத் தடுக்க படைத்தரப்பு சட்டம் என்ற ஆயுதத்தைத் தான் தூக்கிநின்றது.

இப்போது கொழும்பில் இந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வைத் தடுக்க முயன்ற நபர்கள் இனவாதத்தைக் கையிலெடுக்கவும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வைக் கொச்சைப்படுத்தவும் வழியேற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஒன்று நெருங்கிக் கொண்டிருக்கும் நிலையில் இம்முறை தமிழர் தரப்பு இனவாதத் தீயின் வாய்க்கும் வீழ்ந்து விடாமல் கவனமாகச் செயற்படவேண்டிய தருணமிது.

ஏனெனில் சர்சதேசத்தின் பிடிமானம் இன்னும் முழுமையாகத் தளர்ந்துவிடவில்லை அடுத்த தேர்தல் ஒன்று வரும் போது தமிழர் உரிமைக்கான தீர்வுத்திட்டம் நிச்சயம் வலுவான கோரிக்கையாக முன்வைக்கப்படும் வாய்ப்புகள் முகிழ்ந்து கொண்டிருக்கும் நேரத்தில் அதற்குத் தடைக்கற்களைப் போடும் வேலையைச் செய்யக் கூடாது.

எந்தவொரு இன விடுதலைப் போராட்டமும் எடுத்த எடுப்பில் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பது தான் வரலாறு.

இப்போது நமக்கான காலம் கணியத் தொடங்கியிருக்கின்றது அதைச் சிதைத்துவிடாமல் பலப்படுத்திப் பாதுகாத்துத் தக்கவைத்துக் கொள்ளவேண்டியது காலத்தின் கட்டாயம.

“தலைவன் உரத்துச் சொன்னான் நீங்கள் கூர்மையாகத் தீட்டப்பட்ட கத்திகள் உங்களை மண்ணில் விதைக்கின்றேன். பளிச்சிடுவதும் மங்கிப்போவதும் இனி உங்கள் கைகளிலேயே ஆயுதப் போர் முடிந்துவிட்டது“ என்று மௌனப் போரும் புன்னகை ஆயதமும் கவிதை நூலின் வரிகளை ஞாபகத்தில் இருத்திக் கொண்டுகாரிய மாற்றவும் அரசியல் செய்யவும் இளந்தலைமுறைக்குநாம் அறிவூட்ட வேண்டும்“ என குறிப்பிடப்பட்டுள்ளது.

## புத்தர் ஒரு தமிழர் சூளுரை...

பிரபல ஊடகம் ஒன்றின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், ”30 வருட போர் காலத்திலும் எங்களுக்கு எவ்வித பிரச்சினையும் காணப்படவில்லை. தென் இலங்கை வாழ் மக்களுக்கு உண்மை தெரியாது.

முதல் முறை இருந்தவர்கள் தனி தமிழீழ விடுதலை புலிகள் அல்ல. ஈபிடிபி, டெலோ, போன்ற அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து காணப்பட்டது.

அந்த காலப்பகுதியிலேயே பௌத்த விகாரைகள் உடைக்கப்பட்டன. ஆனால் அதை நேரடியாக விடுதலை புலிகள் என கூறமுடியாது. இதை யார் செய்தார்கள் என புரிந்தே பதிலளிக்க வேண்டும்.

மேலும், புத்தர் சிங்களம் அல்ல. அவர் ஒரு தமிழர். அவர் இந்து முறைப்படியே வாழ்ந்தவர். ஆனால் தற்போது அனைவரும் சிங்கள பௌத்தம் என தெரிவிக்கின்றனர். அது தவறானது.” என தெரிவித்துள்ளார்.

## வவுனியாவில் 1000 ஏக்கரில்...

நகர்த்தப்பட்டு வருகிறது. 7 வருடங்களின் முன்னர்- வடமாகாணசபை ஆட்சிக்காலத்தில் இதேதரப்புக்கள், இதேபோன்ற திட்டத்தை முன்னெடுத்த போதும், அது வெற்றியளிக்கவில்லை. அப்போதைய வடமாகாண சபை அதை நிராகரித்திருந்தது. அப்போதைய விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் அதனை கடுமையாக எதிர்த்தார். அப்போது ஐங்கரநேசன் சக்தி வாய்ந்த அமைச்சராக இருந்ததால், அவரது எதிர்ப்பை கருத்தில் கொண்டு, வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் அனுமதியளிக்க மறுத்து விட்டார்.

அத்துடன், அப்போது வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திலும் அனுமதி மறுக்கப்பட்டது. கடந்த 18ஆம் திகதி இந்த காணி வழங்கல் பற்றிய உயர்மட்ட சூம் கூட்டம் நடைபெற்றது. ஜனாதிபதி, கொழும்பு உயரதிகாரிகள் பலர், வவுனியா மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.


இந்த கூட்டத்தில் காணி வழங்கல் பற்றி ஜனாதிபதி தெளிவான கருத்து எதையும் தெரிவிக்கவில்லை. இந்திய தரப்பின் அதிருப்தியையடுத்து ஜனாதிபதி காணி வழங்கலில் பின்வாங்கியிருக்கக்கூடும் என நம்பப்படுகிறது. வவுனியா வடக்கு பகுதியில் இந்த காணிகளை தமக்கு வழங்குமாறே முதலீட்டாளர்கள் தரப்பில் கோரபட்டுள்ளது.

தாய்லாந்தில் பதிவு செய்யப்பட்ட **SUTECX SUGAR INDUSTRY PRIVATE LIMITED** என்ற நிறுவனமே இந்த முன்மொழிவை செய்துள்ளது. இந்த நிறுவனத்தின் இயக்குனராக மைக் எஸ்.மொகமட் என்பவர் குறிப்பிடப்பட்டுள்ளார். இந்த நிறுவனத்தின், Senior Vice President- Project சுரேன் குருசாமி குறிப்பிடப்பட்டுள்ளார்.

18ஆம் திகதி ரணில் தலைமையில் நடந்த காணிக்கான கூட்டத்தில் சுரேன் குரசாமியும் கலந்து கொண்டிருந்தார். சுரேன் குருசாமி ரெலோ அமைப்பின் தேசிய அமைப்பாளராகவும், பேச்சாளராகவும் செயற்படுகிறார். இந்த திட்டத்திற்கான முதலீடு, கிட்டத்தட்ட கொழும்பு, துறைமுக நகரத்தின் முதலீட்டுக்கு இணையானதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் மூலம், போரினால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களின் மறுவாழ்வை மேம்படுத்த திட்டமிட்டுள்ளதாக முதலீட்டாளர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. பெண் தலைமைத்துவ குடும்பங்களிற்கும், போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் முன்னுரிமையின் அடிப்படையில் காணிகளை வழங்கப்படும் என்றும், அவர்கள் கரும்பை உற்பத்தி செய்து நிறுவனத்துக்கு வழங்க வேண்டும் என்றும் முதலீட்டாளர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. காணி கரும்பு செய்கைக்கே கோரப்பட்டுள்ளதாகவும், நிறுவனத்துக்கு அல்லவென்றும் தெரிவித்தனர்.

வடக்கின் எல்லை கிராமத்தில் அமைந்துள்ள இந்த திட்டத்தின் மூலம், வடக்கின் எல்லையை காப்பாற்றலாமென்றும், 1970களில் காந்தியம் அமைப்பினால் 70களில் முன்னெடுக்கப்பட்ட குடியேற்றத் திட்டத்தை ஒத்ததாக இந்த திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

தேசியம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க தொடர்பு கொள்ளுங்கள்..!
தொலைபேசி :
+94 76 567 3339




முன்பெல்லாம் மலையக மாணவர்கள் என்று சொன்னதும் ”கற்றலில் பின் தங்கிய சமூகம்” என்று பெரும்பான்மையாக சொல்வது வழக்கம். காரணம் பல்வேறுபட்ட சமூக, பொருளாதார காரணங்களால் கல்வியை இடைநிறுத்தி சிறு வயதிலேயே வேலைக்கு செல்லும் தன்மை காணப்படுவதாகும். இந்நிலை இன்று முற்றிலும் இல்லை என்று சொல்லிவிட முடியாது. எனினும், பெரும்பாலும் சாதாரண தர கல்வியை பூர்த்தி செய்து, உயர்தர கல்வியிலும் சிறந்த பெறுபேற்றை பெற்று, இலங்கையில் பல்வேறுபட்ட பல்கலைக்கழகங்களில் இன்று மலையக மாணவர்களின் கல்வித் தகைமை அதிகரிப்பதுடன், பல்கலைக்கழகங்களுக்கு செல்லும் மாணவர்களும் அதிகரித்துள்ளனர்.

பல மாணவர்கள் உயர்தரத்தில் கலை பிரிவை தெரிவு செய்வது பாராட்டத்தக்கது. என்றாலும், ஏனைய துறைகளில் அவர்களுக்கு ஆர்வம் இல்லையா? என்ற கேள்வி பலருக்கு எழுந்திருக்கும். வணிகத்துறையை சிறிதளவு தெரிவு செய்து கற்றபோதிலும், விஞ்ஞான, கணித துறைகளை தெரிவு செய்து பல்கலைக்கழகத்திற்குள் பட்டப்படிப்பை தொடரும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவானதாகும். இதற்கு காரணம், கலை பிரிவை தவிர ஏனைய பிரிவில் ஆர்வம் இல்லை என்பதல்ல. குறைந்த கட்டணத்தை செலுத்தி, கலை பிரிவு வகுப்புகளுக்கு மட்டுமே செல்ல முடியும் என்பது தான்.

இன்றும், பொறியியலாளராக வைத்தியனாக உருவாக வேண்டும். என்பது பலரது கனவாக இருந்தாலும், மலையகத்தில் நாள் ஒன்றுக்கு கிடைக்கும் ஊதியம், மாதம் முழுவதுமான உணவு தேவையை பூர்த்தி செய்வதே பெரும் பிரச்சினையாக உள்ள நிலையில், கல்வி இரண்டாம் பட்சம் என்ற எண்ணத்தில் பலர் உள்ளனர்.

ஆனால், சில பெற்றோர்கள் உணவையும் மறந்து, வீட்டில் உள்ள பொருட்களையும் விற்று, தேயிலைத் தோட்ட வேலையுடன் சேர்த்து, இரவு நேரங்களில் தேயிலை தொழிற்சாலைகளுக்கும் கூலி வேலைக்கு சென்று, பிள்ளைகளை படிக்க வைக்கிறார்கள்.

பெற்றோரின் உழைப்பிற்காக, உயர்தரம் கற்று, பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்த மாணவர்களின் கல்வி ஒருவிதத்தில் மாபெரும் வெற்றி! என்றாலும், இன்னொரு விதத்தில் பல்கலைக்கழக வாழ்க்கை என்பது, மலையக மாணவர்களுக்கு பெரும் சவாலான விடயமாகவே உள்ளது.

மலையக மாணவர்களின் பெரும் பிரச்சனையே பொருளாதாரம் தான். பல்கலைக்கழகத்திலும் இந்த பிரச்சனைக்கு பல மாணவர்கள் முகம் கொடுக்கிறார்கள். பெரும்பாலும், தேயிலை தோட்டங்களில் வேலை செய்யும் பெற்றோரின் பிள்ளைகள் தான் மலையகத்தில் இருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகின்றார்கள். உயர்தரத்திற்கான செலவினை விட, பல்கலைக்கழகத்திற்கான செலவுகள் அதிகம். உணவு, விடுதி, கற்றல் செயல்பாடுகள், இதர செலவுகள் என பல்வேறுபட்ட விடயங்களுக்கு பணம் தேவைப்படுகிறது.

பல்கலைக்கழகங்களில் உதவி தொகை வழங்கப்பட்டாலும் கூட, அந்த தொகை போதாமையும், அதே சமயத்தில் குறித்த நேரத்திற்கு அவை வழங்கப்படாத காரணத்தினால், பெரும்பாலும் வீட்டு வருமானத்தை எதிர்பார்த்து காத்திருக்க வேண்டிய நிலையும் காணப்படுவதுடன், ஒவ்வொரு மாதமும், ஏற்படும் மேலதிக செலவுக்கான தொகையை, பெற்றுக்கொள்ள சிரமப்பட வேண்டியதாகவும் உள்ளது.

இந்நிலையில், பல்கலைக்கழக கல்வியை நிறைவு செய்ய பல மாணவர்கள் வேலைக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. ஒரு விதத்தில் பட்டப்படிப்பை மாணவர்களே தங்களின் உழைப்பில் பூர்த்தி செய்து கொண்டாலும், இரவு நேர வேலைக்கு செல்லும் மாணவர்களின் தொகை அதிகமாக காணப்படுவதால், கற்றலில் கவனம் குறைவடைந்து, பெருபேற்றை பாதிக்கும் நிலையும், உருவாகி விடுகிறது. சில மாணவர்கள் இத்தகைய சூழ்நிலைகளுக்குள் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ள, பல்கலைக்கழக கல்வியையே இடைநிறுத்திக் கொள்கிறார்கள்.

அடிப்படையில் பொருளாதாரம் அதிக பிரச்சனையை ஏற்படுத்துவதால் அருகில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு செல்லலாமே? என்ற கேள்வி எழலாம் ஆனால், அருகிலுள்ள பல்கலைக்கழகங்களில் காணப்படும் மொழி பிரச்சனை காரணமாக, அங்கு செல்ல அச்சப்படுவதால், தூர பிரதேச பல்கலைக்கழகங்களுக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் காணப்படுகிறது.

இதனால், போக்குவரத்து பிரச்சனையை எதிர்நோக்குகிறார்கள்.

நீண்ட தூரம் பேருந்து பயணம் என்பதால், பேருந்தில் பலவிதமான அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன், பல்கலைக்கழகத்திலிருந்து வீட்டிற்கு செல்லும்போது, மலையகப் பாதைகளின் சீரற்ற தன்மையும், மக்களுக்கான வரையறுக்கப்பட்ட பேருந்து சேவையும், போக்குவரத்தின் பெரும் சவாலாகும்.

வீட்டிற்கு செல்வதை விட, பல்கலைக்கழக சமூகத்தில் தங்கிவிட நினைத்தாலும், சமூக ரீதியாக பழக்கத்தில் இருந்து மாறுபட்ட சமூகமாக இருப்பதால், மொழிநடை கலாச்சாரம், உணவு முறைகள் போன்றவற்றாலும், புதிய சமூகத்தை விரைவாக பழகிக் கொள்ள முடியாத தன்மையும், இலகுவில் ஏற்றுக் கொள்வதிலும் சிரமத்தை எதிர்நோக்குகிறார்கள்.

சமூகம் மட்டுமல்ல, சூழலியல் சார்ந்த விடயங்களும், கல்வியில் முக்கியம் பெறுகிறது. இலங்கையை பொறுத்தவரையில், மலையகத்தின் காலநிலையும், ஏனைய மாவட்டங்களின் காலநிலையும், வித்தியாசமானது. குளிரான பிரதேசத்திலிருந்து திடீரென வெப்பமான சூழலுக்குள் வாழ முற்படும் போது, உடலில் ரீதியான தோல் பிரச்சனை, கண்வலி, தலைவலி, உடல் ஒவாமை போன்ற பிரச்சனைகள் மருத்துவ செலவையும் தருவதுடன், இது உளவியல் பாதிப்புக்கும் காரணமாக அமைந்து விடுகிறது.

இவை மட்டுமல்ல, மலையக பாடசாலைகளில் ஆங்கிலம், மற்றும் கணினி பாடங்களினை கற்பிக்கும் பாடசாலைகள் மிகக் குறைவு. கிராமிய பாடசாலைகளில் இத்தகைய பாடங்கள் கற்பிக்கப் படுவது இல்லை என்றும் சொல்ல முடியும். அப்படி இருக்க பல்கலைக்கழகங்களில் கணினி மற்றும் ஆங்கில அறிவு மிக அவசியமான ஒன்றாக இருக்கும் போது, புதிதாக அவற்றை ஆரம்பத்திலிருந்து கற்று பட்டப்படிப்பை தொடர மாணவர்கள் பெரிதும் சிரமப்படுவதோடு, இப்பாடங்களையோ, அல்லது குறித்த ஒரு பாடத்துடன் தொடர்புடைய இதர பாடங்களையோ, வெளியில் சென்று கற்பதற்கான சூழ்நிலைகள் இல்லாத காரணத்தினால், வெறுமனையே பட்ட சான்றிதழ் உடன் மட்டும் வெளியேறும் சந்தர்ப்பங்கள் அதிகமாகவே காணப்படுகிறது.

இவ்வாறு, பல்வேறுபட்ட பிரச்சனைகளுக்கு மலையக மாணவர்கள் முகம் கொடுப்பதால் பல்கலைக்கழகம் வரை கல்வியை தொடர்ந்தும், அதனை மிகச் சிறப்பான பெறுபேற்றுடன் நிறைவு செய்ய முடியாத நிலையில், பலரின் கல்வி செயல்பாடு மந்தகதியில் நகர்கிறது.

பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வியில் மலையக மாணவர்களின் பல்கலைக்கழக சவால்கள் பற்றிய அறிவுறுத்தல்களும், அவற்றை கையாள்வதற்குரிய சிறந்த வழிமுறைகளையும், வழங்கும் பட்சத்தில் பல்கலைக்கழக கல்வியை தொடரும் துணிவும், அதே சமயத்தில், சவால்களை சந்திக்க கூடிய தெளிவும் உருவாகும். இதனால், மிகச்சிறந்த கல்வியலாளர்களை மலையகத்தில் உருவாக்க முடியும்.


# வெளிவரவிருக்கும்

## தேசியம் வாராந்த பத்திரிகையின் விளம்பர விலைப்பட்டியல்

தேசியம் www.thesiyamnews.com THESIYAM

**NEWSPAPER SIZES, RATE PER EDITION & ORDER FORM**

**WEEKLY NEWSPAPER**

| BLACK & WHITE ADVERTISEMENT | | COLOUR ADVERTISEMENT | |
|---|---|---|---|
| Front Page Top | 2000/= | Front Page Top | 4500/= |
| Front Page Bottom | 4000/= | Front Page Bottom | 6000/= |
| Back Quarter Page | 6000/= | Back Quarter Page | 8000/= |
| Back Half Page | 8000/= | Back Half Page | 10000/= |
| Back Full Page | 12000/= | Back Full Page | 22000/= |
| Inner Quarter Page | 3500/= | Inner Quarter Page | 5000/= |
| Inner Half Page | 6000/= | Inner Half Page | 8000/= |
| Inner Full Page | 10000/= | Inner Full Page | 15000/= |
| Inner Box Ad | 800/= | Inner Box Ad | 1200/= |

**Tel : 94 76 567 3339**

E-mail : thesiyamnews@gmail.com | Web : www.thesiyamnews.com